# அமெரிக்க வர்த்தக சம்மேளன மன்றத்தில்
# தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் ஆற்றிய உரை
# ஓகஸ்ட் 15, 2019

**தூதுவர் டெப்லிட்ஸ்:** இங்கு கூடியிருப்பவர்கள் பன்முகப்பட்ட பொருளாதாரத் துறைகளை பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். நாம் இங்கு எதிர்பார்க்கும் இலங்கையின் பொருளாதார எதிர்காலம் இதுவென நான் கருதுகின்றேன். என்னை இங்கு பேச அழைத்தமைக்கு பதில் தலைவர் பிரசாந்த ஜயமான்ன மற்றும் நுஸ்ரெத் ஜலடீன் ஆகியோருக்கு நன்றிகளைக் கூறிக் கொள்வதுடன், சம்மேளனத்துக்கும் தூதரகத்துக்கும் இடையிலான ஈடுபாட்டை அதிகரிக்க எடுக்கும் முயற்சிகளுக்கு குறிப்பாக நுஸ்ரெத்துக்கு நன்றி. இதனைத் தொடர்ந்தும் பலப்படுத்த விரும்புகின்றோம். கடந்த சில வருடங்களாக நாம் சிறந்த பங்காண்மையை ஏற்படுத்தியிருப்பதாக நான் நம்புவதுடன், இன்னும் பலவிடயங்களை ஆற்றமுடியும் என்பதும் எனக்குத் தெரியும்.

தூதுவர் என்ற ரீதியில் எனது முதன்மைக் குறிக்கோள் அதுபற்றிப் பேசுவதாகும். நமக்கிடையில் சிறந்த பங்காண்மை அவசியம். ஏனெனில், அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சிநிரலை முன்னெடுப்பது எனது நோக்கங்களில் ஒன்றாகும். திறந்த, நியாயமான மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை வரவேற்கக் கூடிய பரஸ்பர பொருளாதார சூழலின் அடிப்படையில் அமெரிக்க வர்த்தகங்களை இலங்கை பங்காளர்களுடன் இணைப்பதற்கான புதிய வழிகள் மற்றும் புதிய வாய்ப்புக்கள் இருக்கின்றவா என்றே எனது குழு தொடர்ச்சியாக கண்காணித்து வருகிறது.

அதனையே நாம் பொருளாதார இராஜதந்திரம் என அழைக்கின்றோம். கடல்கடந்த ரீதியில் எமது ஈடுபாடுகளுக்கு இதுவும் ஒரு அடிக்கல்லாகும். இவை அனைத்திலும் இருதரப்பு வர்த்தகத்தை ஊக்குவிப்பது சிறந்ததாகும். எனினும், பொருளாதார இராஜதந்திரம் என்பது வர்த்தக புள்ளிவிபரங்களை அதிகரிப்பதற்கும் அப்பாற்பட்டதாகும். அதாவது புதிய மற்றும் இதுவரை பயன்படுத்தப்படாத சந்தையை உருவாக்குவதாகும். குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான வாய்ப்புக்களை அடையாளம் காண்பதாகும். பெண் தொழில்முயற்சியாளர்களுக்கான வாய்ப்புக்களை ஊக்குவிப்பது, வர்த்தகம் மற்றும் முதலீட்டுக்கான முக்கிய தடைகளை நிவர்த்திசெய்தல், அவையாவன கட்டுப்பாடுகள், கட்டணங்கள், வரியற்ற தடைகள் அல்லது கலாசார ரீதியான தவறான எண்ணப்படுகள் போன்றவற்றை நிவர்த்தி செய்வதால் அனைவருக்கும் பல வாய்ப்புக்கள் ஏற்படும்.

என்னைப் பொறுத்தவரையில் குறிப்பாக, கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுரகத்தின் ஒட்டுமொத்த குழுவின் ஒருங்கிணைந்த வலிமையானது பொருளாதார இராஜதந்திரத்தை ஊக்குவித்தல் மற்றும் இரு தரப்புக்கும் வெற்றியான சூழலை ஏற்படுத்துவதாகும். எமது புதிய பொருளாதார பிரதானி சுசன் வோல்க் உடன் இணைந்துள்ளேன். அவரும் இங்கிருக்கின்றார். உங்களில் பலர் அவரைச் சந்திப்பதற்கான வாய்ப்பைப் பெறுவீர்கள் எனக் கருதுகின்றேன். இந்த முயற்சிகளை முன்கொண்டு செல்ல அவர் உதவிசெய்வார். இரு நாடுகளுக்கும் வெற்றியளிக்கும் சூழலை ஏற்படுத்தவே நாம் விரும்புகின்றோம். இதனைச் செய்வதற்கு வர்த்தக சமூகத்தினர் கூறுவதை செவிசாய்த்து, உங்களுடைய கருத்துக்களை அறிந்து அதற்கான தீர்வுகளைப் பெற இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என்பது எமக்கு நன்கு தெரியும்.

வர்த்தகத்தை கொண்டு நடத்தும்போது பகிரப்பட்ட செழிப்பு மற்றும் பகிரப்பட்ட மதிப்புக்களை உள்ளடக்குவதே அமெரிக்காவின் பொருளாதார இராஜதந்திரமாகும். இதற்கு முன்னர் நாம் விரும்பும் பொருளாதார சூழலை விபரிக்க திறந்த, நியாயமான மற்றும் பரஸ்பர என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியிருந்தேன். அவ்வாறான பொருளாதார சூழலொன்றையே நீங்களும் விரும்புகின்றீர்கள் எனக் கருதுகின்றேன். எனெனில் அனைத்துப் பொருளாதாரத்துக்கும் இவையே முக்கியமானவை. அவையே வெளிப்படையான மற்றும் போட்டிமிக்க பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும். இந்தத் தகுதிகள் - திறந்த, நியாயமான, பரஸ்பரம் என்பவற்றுடன் வெளிப்படையான மற்றும்

போட்டித்தன்மை நிறைந்த என்ற இரு புதிய சொற்களையும் சேர்த்துக்கொள்கின்றேன் - தனியார் துறையினரின் ஈடுபாட்டுக்கு நிலையான ஆடுகளத்தை ஏற்படுத்தும். அதுமாத்திரமன்றி அவை பரஸ்பரம் நன்மையளிக்கக் கூடிய ஏற்பாடுகள் மற்றும் பொருளாதார பாதிப்புகளை ஏற்படுத்தும் வர்த்தக செயற்பாடுகளில் இருந்தான விடுதலையை உறுதிப்படுத்துவதன் மூலம் நாடுகளின் இறைமையையும் அவை ஊக்குவிக்கின்றன. அவை புதிய யோசனைகளின் உற்பத்திக்கு ஆதரவு வழங்குவதுடன், இளம் தொழில்முயற்சியாளர்களுக்கு வாய்ப்புக்களையும் அதிகரிக்கின்றன. கடந்த 70 வருடங்களுக்கு மேல் உலகில் வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றுக்கு இவையே காரணமாக இருந்தன என நம்புவதால் இந்தப் பெறுமானங்களில் அமெரிக்கா கவனம் செலுத்துகின்றது.

இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து இதுவரை அமெரிக்கா ஒரு பில்லியன் டொலருக்கும் அதிகமான நன்கொடைகள் மற்றும் நேரடி அபிவிருத்தி உதவிகளை வழங்கியுள்ளது. கடந்த 70 வருடங்களுக்கு மேலான காலப் பகுதியில் வழங்கப்பட்ட இந்த ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் உதவியில் ஒரு டொலர் கூட கடனாக வழங்கப்படவில்லை. நீண்டகால வளர்ச்சியை ஏற்படுத்தவும், இரு நாடுகளுக்கும் இடையிலான சுபீட்சத்தை பகிர்ந்துகொள்ளவும் நாம் தொடர்ந்தும் பணியாற்றுகின்றோம். 10,000ற்கும் அதிகமான குடும்பங்கள் அமெரிக்க அரசாங்கத்தின் உதவிகளால் நேரடியாக நன்மையடைந்திருப்பதுடன், இந்தக் குடும்பங்களின் நிகர வருமானம் 10.7 மில்லியன் டொலர்களைத் தாண்டியுள்ளது - அண்மையகால திட்டமும் இதில் உள்ளடங்கியுள்ளது. 5000ற்கும் அதிகமான சிறிய தொழில்முயற்சிகள் எமது உதவியினால் நன்மையடைந்திருப்பதுடன், முதலீடுகளைப் பெற்றுக்கொண்டவர்களின் மொத்த விற்பனை 68 மில்லியன் டொலர்கள் என கூறப்படுகிறது. மீண்டும் அண்மைக்காலத் திட்டங்கள் - 70 வருட காலங்கலன்றி கடந்த சில வருடங்களிலாகும்.

முக்கியமாக, ஒரு நாட்டின் தொழிலாளர் சக்தியில் பெண்களின் பங்களிப்பைக் கொண்டிருக்க வேண்டும் - பொருளாதார வளர்ச்சி மற்றும் சகலருக்கும் சாத்தியமான பொருளாதாரத்தை ஏற்படுத்த இந்தப் பங்களிப்பு அவசியமாகும் - அமெரிக்க அரசாங்கத்தின் திட்டங்களில் ஒட்டமொத்த பெண்களின் பங்கேற்பு 26 சதவீதமாக கூறப்படுகிறது. தொடர்ச்சியான பிரதிபலிப்பின் பெறுபேறாகவே நாம் இதை கருதுகிறோம்.

உங்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தக்கூடிய மூன்று திட்டங்களை உங்களுக்குக் கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன், ஏனெனில் அவை பொருளாதார வளர்ச்சிக்கு நேரடியாகப் பங்களிக்கின்றன. அத்துடன் சில சந்தர்ப்பங்களில் இந்தத் திட்டங்கள் ஊடகங்களில் தவறான தகவல்களை ஏற்படுத்தலாம். ஊடக விருந்தினர்கள் இங்கு வருகைதந்திருந்தாலும், உங்களிடம் சரியான தகவல் இருப்பதை உறுதிப்படுத்த நான் விரும்புகின்றேன். இந்தத் திட்டங்கள் அரசாங்கத்தின் அணுகுமுறையை - அமெரிக்க அரசாங்கத்தின் அணுகுமுறை – அதாவது நான் பேசும் வளர்ச்சியான: திறந்த, நியாயமான, பரஸ்பர மற்றும் வெளிப்படையான வளர்ச்சியைக் குறிக்கும். பொருளாதார வளர்ச்சியானது தனியார் துறையினரின் பங்காண்மையுடன் சீரமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை இத்திட்டங்கள் வெளிப்படுத்தும்.

You Lead என்பது இதில் ஒரு திட்டமாகும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பாதிப்பிலிருந்து தொழில்துறையினர் விரைவில் மீட்சிபெற உதவும் வகையில் எமது சகபணியாளர்களான யூஎஸ்எயிட் பல்வேறு தனியார்துறை பங்காளர்களுடன் - இலங்கை சுற்றுலா கூட்டணியின் லவ் ஸ்ரீலங்கா முயற்சி உள்ளிட்ட - இணைந்து செயலாற்றுகின்றனர். தொழில்முனைவோருக்கான பாடத்திட்டத்தை திருத்துதல், இளம் தொழில்முயற்சியாளர்களை ஈர்க்கும் வகையில் தொழில்பயிற்சி மற்றும் தொழில்நுட்ப பயிற்சியாளர்களுக்கு புதிய கருவிகளை வழங்குதல் என்பவற்றுக்கு You Lead திட்டம் உதவியளிக்கும். இந்த அறையில் உள்ள உங்கள் சிலருடன் இணைந்து நாம் பணியாற்றமுடியும்.

Biz+ மற்றைய திட்டமாகும். இதில் நாடு முழுவதிலுமிருந்து 60ற்கும் மேற்பட்ட சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்களுடன் நாம் பங்காளர்களாக இணைந்துள்ளோம். இதனால் கிடைத்திருக்கும் பிரதிபலன் ஈர்க்கக்கூடியதாக அமைந்துள்ளது. உட்கட்டமைப்பு அபிவிருத்தியை மேம்படுத்த, பெண்களை வலுவூட்ட, கிராமிய பொருளாதாரத்தில் உள்ள சிறிய வர்த்தகர்களுக்கு உதவிசெய்ய, பெருக்கப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட உற்பத்தியளவு, இலாபத் தன்மையை

அதிகரித்தல், பணியிட ஒருங்கிணைப்பை மேம்படுத்தல், நிதி மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளை சர்வதேச தரத்தில் பேணுவதற்கு உதவியளித்தல் போன்றவற்றுக்கு Biz+ உதவுகிறது. இதனூடாக இலங்கையின் வர்த்தகங்களுக்கிடையில் போட்டித்தன்மை ஏற்படும்.

Biz+ திட்டம் உதவியளித்த வர்த்தகங்கள் தனியார் மூலதனத்தில் 22 மில்லியன் டொலர்களை பெருக்கியுள்ளன. இவை 8,000ற்கும் அதிகமான வேலைவாய்ப்புக்களை உருவாக்கியிருப்பதுடன், வர்த்தக முதலீடுகள், வேலைவாய்ப்புக்கள் மற்றும் வருமான அதிகரிப்பு போன்றவற்றால் 25 மில்லியன் டொலர் பெறுமதியான பொருளாதார தாக்கம் ஏற்பட்டுள்ளது. அதாவது 8,000 குடும்பங்கள் நிலையான மற்றும் நம்பகமான வருமானத்தை பெற்றுள்ளன - இது எனக்கும், தூதரகத்தில் உள்ள எனது அணியினருக்கும் உண்மையாக பெருமையைத் தருகிறது.

இறுதியாக, மிலேனியம் சலெஞ்ச் கோர்ப்பரேஷன் உதவிக்கொடை குறித்துப் பேசவிரும்புகின்றேன். இது தொடர்பில் நாம் ஊடகங்களின் வாயிலாகக் கேள்விப்பட்டுள்ளோம். இந்த உதவித்திட்டம் உண்மையில் என்ன என்பதை தெளிவுபடுத்தும் நோக்கில் இலங்கை அரசாங்கமும், மிலேனியம் சலெஞ்ச் கோர்ப்பரேஷனும் தொடர்ந்தும் பேசிவருகின்றன. இதுபற்றி நான் உங்களுக்கு மேலும் விபரிக்கின்றேன். இந்தத் திட்டத்தை உருவாக்குவதற்கு கடந்த இரண்டு வருடங்களாக நாம் - இலங்கை அரசாங்கம், அமெரிக்க அரசாங்கம் - ஒத்துழைப்புடன் பணியாற்றினோம். பொருளாதார வளர்ச்சியை வினையூக்கப்படுத்துவது இதன் நோக்கமாகும். உங்களில் சிலர் இது தொடர்பான செயலமர்வுகளில் பங்கேற்றிருக்கலாம் என்பதுடன், இந்த உத்தேச திட்டம் ஐந்து வருடங்களைக் கொண்டது என குழுவினர் அடையாளம் கண்டுள்ளனர். இதற்கு 480 மில்லியன் டொலர் நிதிக்கொடை வழங்கப்படும். ஏறத்தாழ அரை பில்லியன் டொலர் பெறுமதி அமெரிக்க மக்களால் இலங்கை மக்களுக்கு நன்கொடையாக வழங்கப்படுகிறது. இது ஒரு கடன் அல்ல. இந்தத் திட்டத்தினால் ஒரு சதம்கூட இலங்கையின் இருப்புநிலையில் கடனாக சேர்த்துக்கொள்ளப்படாது.

இந்தத் திட்டத்தினால் என்ன சாதிக்கப்படவுள்ளது? இதில் இரண்டு பிரிவுகள் உள்ளன - போக்குவரத்து உட்கட்டமைப்பு மற்றும் காணி நிர்வாகம். இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் இந்த இரண்டு விடயங்களும் கணிசமான தடையாக இருப்பதாக அடையாளம் காணப்பட்டமையால் இவை தேர்ந்தெடுக்கப்பட்டன. இந்தத் துறைகளில் காணப்படும் முக்கியமான சவால்களை உங்களின் வர்த்தகங்களின் போது நீங்கள் அறிந்துகொண்டிருப்பீர்கள் என நம்புகின்றேன். அதனாலேயே அவற்றை இத்திட்டத்தின் முக்கிய விடயங்களாக நாம் அடையாளம் கண்டுள்ளோம்.

இதனால் இத்துறையில் என்ன மாற்றங்கள் ஏற்படும். போக்குவரத்து துறையிலிருந்து நான் ஆரம்பிக்கின்றேன். இந்த அபிவிருத்தி ஒப்பந்தமானது நாளாந்தம் 2 மில்லியனுக்கும் அதிகானவர்கள் பயணிக்கும் கொழும்பு பிரதான வீதிகளில் 205 கிலோமீற்றருக்கும் அதிகமான வீதி மேம்படுத்தப்படும். இது உச்ச மணித்தியாலங்களில் ஏற்படுகின்ற வாகன நெரிசலை கணிசமாகக் குறைப்பதற்கு உதவும். அத்துடன், சனத்தொகையில் அரைப்பகுதிக்கும் மேலானவர்கள் தமது வேலைகளுக்குச் செல்ல பயன்படுத்தும் போக்குவரத்து சாதனமான பஸ் போக்குவரத்தை முன்னேற்றுவதையும் இத்திட்டம் உள்ளடக்கியுள்ளது. மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து முகாமைத்திட்டம் இதன் பிரதான அம்சமாகும்.

இந்த ஒப்பந்தமானது நாட்டிலுள்ள மிகவும் வறுமையான பிராந்தியங்களில் உள்ளடங்கும் மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் மாகாண வீதிக் கட்டமைப்பை தரமுயர்த்துவதற்கும் நிதியுதவியளிக்கும். இந்தப் பிராந்தியங்கள் உற்பத்தித்திறன் மிக்கவை. தேயிலை, இறப்பர், பழங்கள் மற்றும் மரக்கறி என்பவற்றை இந்தப் பிராந்தியங்களே உற்பத்திசெய்கின்றன. வேறுவிதமாகக் கூறுவதாயின் குறிப்பாக தமது உற்பத்திகளுக்கான சந்தையைப் பெறவேண்டிய தேவையைக் கொண்ட சிறு தொழில்முயற்சியாளர்கள் இருக்கும் இடங்களாகும். உறுதியான வீதிக் கட்டமைப்பு,

துறைமுகங்களுக்கான வலையமைப்பு மற்றும் தமது வர்த்தகத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் கொழும்பு சந்தைக்கான வாய்ப்புகள் அவர்களுக்குத் தேவைப்படுகின்றன.

காணி நிர்வாகத்தை பொறுத்த வரையில், அரசாங்கத்திடமுள்ள காணிகளுக்கான ஆவணப்படுத்தல்களை மேம்படுத்தவும் அவற்றை அடையாளம் காண்பதற்கும் இலங்கை அரசாங்கத்தினால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கு நிதியளிப்பதாகவும் அமையும். அது மாத்திரமன்றி இலங்கை பிரஜைகள் டிஜிட்டல் முறையில் தமது காணி உறுதிகளையும் தலைப்புக்களையும் மாற்ற முடிவதுடன், காணி உறுதிகளுக்கு ஏற்படுகின்ற சேதங்கள், இழப்புக்கள் அல்லது களவுகளைத் தவிர்க்க முடியும். இவை அரசாங்கத்தினால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டங்கள் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன். மிலேனியம் சலெஞ்ச் கோர்ப்பரேஷன் உதவித் திட்டத்தில் எந்தவிதமான புதிய திட்டங்களைக் கொண்டுவரும் கனவும் இல்லை. ஏற்கனவே உள்ள திட்டங்களை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நடைமுறைப்படுத்துவதற்கு உதவியாகவே இது அமையும். இந்தத் திட்டம் தொடர்பில் குறிப்பாக பொது இடங்களில் தவறான மற்றும் மோசமான தகவல்கள் வழங்கப்படுவதாலேயே இதனை நான் குறிப்பிடுகின்றேன். மேலும் சில விடயங்களை தெளிவுபடுத்த விரும்புகின்றேன். இன்னும் சில நிமிடங்கள் நீங்கள் ஈடுபாடுகாண்பிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

இலங்கை அரசாங்கத்தின் முன்னுரிமை மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருப்பவை தொடர்பில் நடத்தப்பட்ட ஆய்வுகளுக்கு பதிலளிக்கும் வகையிலும், போக்குவரத்து உட்கட்டமைப்பு மற்றும் அரசாங்கம் திட்டமிட்டுள்ள மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவது என்ற பிரதான பகுதிகளை நிவர்த்திக்கும் வகையிலும் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் துறையின் வளர்ச்சியை கோடிட்டுக் காட்டக்கூடிய வகையில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார மற்றும் கல்விசார்ந்த ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை அரசாங்கம், தனியார் துறை, சிவில் சமூகம், கல்வியியலாளர்கள் எனப் பலதரப்புடன் நடத்தப்பட்ட விரிவான ஆலோசனைகளுக்கு அமையவே இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அனைத்து அம்சங்களினதும் கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு என்பவற்றை இலங்கையே தக்கவைத்திருக்கும். முன்னேற்றப்படவுள்ள அனைத்து வீதிகள், சகல சமிக்ஞைகள், தரமுயர்த்தப்படவுள்ள பஸ் வலையமைப்பு, காணிப் பதிவுகளை டிஜிட்டல் மயப்படுததல் மற்றும் சரியான காணி அளவீடுகளை மேற்கொள்ளல் போன்ற சகல முயற்சிகளும் இலங்கையின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும். இத்திட்டத்துக்கான ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்கா எந்தவொரு காணிக்கான உரிமையையோ, அல்லது கட்டுப்பாட்டையோ பெற்றுக்கொள்ளப்போவதில்லை.

மிலேனியம் சலெஞ்ச் கோர்ப்பரேஷன் வரையறுக்கப்பட்ட ஐந்துவருட நடைமுறைப்படுத்தல் காலத்தைக் கொண்டிருப்பதால், குறிப்பிட்ட காலப்பகுதிக்கே நாம் ஒப்பந்தம் செய்துகொள்ளவுள்ளோம். ஐந்து வருடங்கள் நடைமுறைப்படுத்தல் காலமாகும். இதனைவிட 18 மாதங்கள் முதல் இரண்டு வருடங்கள் வரையான மேலதிக காலத்தில் சகல விடயங்களையும் தயார்ப்படுத்துவதற்கு - சாத்தியக்கூற்று ஆய்வுகளை உறுதிப்படுத்துவது, ஐந்துவருடங்களில் பூர்த்திசெய்வதற்கான விடயங்களை முன்னிலைப்படுத்துவதற்கான காலமாக அமையும். 480 மில்லியன் டொலர்கள் செலவுசெய்யப்படுவதை நீங்கள் பாராட்டுவீர்கள் என நம்புவதுடன், இந்த இலக்கை அடைவதற்கு ஐந்து வருடங்கள் என்ற சிறியதொரு காலப்பகுதியே உள்ளது. விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கு நாம் தயாராகவேண்டும். இத்திட்டத்தின் ஒட்டுமொத்த காலம் ஏழு வருடங்களுக்கு மேற்படாததாகும். இது நிலைத்திருக்கும் ஒப்பந்தம் அல்ல. ஒரு தரத்துக்கான திட்டமாகும்.

தனியார் துறையினருடன் வெளிப்படையான பங்காண்மையை ஏற்படுத்துவது மிலேனியம் சலெஞ்ச் கோர்ப்பரேஷனின் மற்றுமொரு அம்சமாகும். கொள்வனவு, பங்காண்மை மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் என்பவற்றை மிலேனியம் சலெஞ்ச் கோர்ப்பரேஷன் இணையத்தளத்தில் நீங்கள் பார்வையிடலாம். அனைவரையும் இத்தகவல்களைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்கின்றேன். MCC.gov என்ற இணைய இணைப்பில் எம்முடன் பணியாற்றுங்கள் (Work With Us page) என்ற பக்கத்தின் ஊடாக நீங்கள் இத்தகவல்களை இலகுவாக அறிய முடியும். யாருடன் இணைந்து செயற்படமுடியுமோ அவர்களுடனான பங்காண்மையை நாம்

எதிர்பார்ப்பதுடன், மிலேனியம் சலேஞ்ச் கோர்ப்பரேஷன் திட்டமானது தனியார் துறையினரை மனதில் கொண்டு தயாரிக்கப்பட்ட திட்டமாகும்.

மிலேனியம் சலெஞ்ச் கோர்ப்பரேஷன் தொடர்பில் சிறு விளக்கத்தை உங்களுக்கு வழங்க விரும்புகின்றேன். மிலேனியம் சலெஞ்ச் கோர்ப்பரேஷன் என்பது அமெரிக்க அரசாங்கத்தின் அபிவிருத்தி உதவி முகவரமைப்பாகும். இது உங்களுக்கு நன்று அறியப்பட்ட யூஎஸ்எயிட் அமைப்பின் சகோதர அமைப்பாகும். இது மிகவும் தனிப்பட்ட மற்றும் காலவரையறையைக் கொண்ட அபிவிருத்தி உதவித்திட்டமாகும். மிலேனியம் சலெஞ் கோர்ப்பரேஷன் ஊடாக 2004ஆம் ஆண்டு முதல் அமெரிக்கா உலகம் முழுவதிலுமுள்ள 29 நாடுகளுடன் ஏற்படுத்தியுள்ள 37 ஒப்பந்தங்களின் ஊடாக 14 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்துள்ளது. பொருளாதார தடைகளை நீக்குவதற்கும், வறுமையிலிருந்து மக்களை மீட்பதற்கும் உதவ உலகம் முழுவதிலும் அமெரிக்காவினால் செலவுசெய்யப்பட்டுள்ள கணிசமான அபிவிருத்தி உதவியாக இது அமைந்துள்ளது.

ஏனைய நாடுகளில் செய்துகொள்ளப்பட்ட இதுபோன்ற ஒப்பந்தங்கள் பற்றிய சில உதாரணங்களை நான் இங்கு தருகின்றேன். ஜோர்ஜியாவில், ஜோர்ஜியா பல்கலைக்கழகம் விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் மருத்துவம் ஆகிய துறைகளில் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது - இங்கு முன்மொழியப்பட்டதைவிட மிகவும் வித்தியாசமான ஒப்பந்தமாகும். செனகல் நாட்டில் அதிகரித்துள்ள நம்பகமான மின்சாரத் தேவையை பூர்த்தி செய்வதற்காக அந்நாட்டின் எரிசக்தித்துறையை பலப்படுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. மற்றும் நேபாளத்தில், குறைந்த எரிசக்தி விநியோகம் மற்றும் உயர்ந்த எரிசக்தி பயண செலவீன பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கு இந்நிதியுதவி வழங்கப்படுகிறது. தெற்காசிய நாடுகளில் முதல் தடவையாக மிலேனியம் சலெஞ்ச் கோர்ப்பரேஷன் ஒப்பந்தத்தின் ஊடாக உதவி வழங்கும் திட்டத்தில் நான் கையொப்பமிட்டமை பெருமையளிக்கிறது.

இந்த ஒப்பந்தங்கள் யாவும் நடைமுறைப்படுத்திய நாடுகளுக்கே அனைத்தையும் வழங்கியிருப்பதுடன், அவை உலகம் முழுவதிலும் வளர்ச்சிக்கு உதவியுள்ளன. 24 ஒப்பந்தங்களில் சகலதும் முடிக்கப்பட்டுள்ளன. அதாவது, உலகளாவிய ரீதியில் வர்த்தகங்களை சந்தையுடன் இணைக்கும், மற்றும் உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தகத்திற்கு உந்துதலளிக்கும் 3,480 கிலோமீற்றருக்கும் மேற்பட்ட வீதிகளில் மில்லியன் கணக்கான மக்கள் தற்போது பிரயாணிக்கின்றனர். இவை ஒப்பந்த திட்டங்கள் ஊடாக நிர்மாணிக்கப்பட்டவை அல்லது மேம்படுத்தப்பட்டவையாகும்.

மேலதிகமாக, 300,000ற்கும் அதிகமான குடும்பங்கள், வர்த்தகங்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் காணிக்கான சட்ட உரிமையைக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களை வலுப்படுத்தியுள்ளன. இது தனிப்பட்ட நபர் கடன்களைப் பெறுவதற்கும், காணி தொடர்பான பிரச்சினைகளைக் குறைப்பதற்கும் வழிவகுத்துள்ளது. இதுபோன்று இலங்கையில் மிலேனியம் சலெஞ்ச் கோர்ப்பரேஷன் திட்டத்தின் ஊடாகவும் இதுபோன்ற அடைவுகளைப் பெறமுடியும் என நான் நம்புகின்றேன்.

அமெரிக்க அரசாங்கம் இலங்கையின் எதிர்காலத்தில் முதலிடும் தனியான முதலீடு இதுமாத்திரமல்ல. இதற்கான காரணத்தை உங்கள் முன்னிலையில் நான் கூறவிரும்புகின்றேன். அமெரிக்க நிறுவனங்கள் இலங்கையில் 300 மில்லியன் டொலருக்கும் அதிகமான பணத்தை முதலீடு செய்துள்ளன. இதனால் நூற்றுக்கணக்கான உயர் தரத்திலான வேலைவாய்ப்புகள் உருவாகியுள்ளன. உற்பத்தியிலிருந்து தகவல் தொழில்நுட்ப வர்த்த சேவைகள் வரை வேலைவாய்ப்புக்கள் உருவாகியுள்ளன. நீங்கள் அனைவரும் இலங்கை பொருளாதாரத்தின் எதிர்காலம் என்பதால் நான் அவ்வாறு கூறினேன்.

குறிப்பாக அமெரிக்கக் கம்பனிகள் எதிர்பார்ப்பது – ஏனைய நாடுகளில் இருந்தான

கம்பனிகளும் கூட – அவற்றின் முதலீடுகளுக்கு சீனாவிடமிருந்தான ஆபத்தை குறைத்துக் கொள்வதாகும். இந்தத் துறைகளில் முதலீடு செய்வதற்கான கூடுதல் சாத்தியங்களை நான் இங்கு காண்கிறேன் - இவ்வாறான முதலீட்டாளர்களை கவர்வதற்கான வாய்ப்பு இலங்கைக்கு உள்ளது. குறிப்பாக, மிதமான உற்பத்திகளைக் குறிப்பிடலாம்.

அமெரிக்க பொருளாதார இராஜதந்திரத்தில் மிகவும் முக்கியமான அம்சம் என்னவெனில், வர்த்தக சூழலை முன்னேற்றுவதற்கான குறிப்பிட்ட மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதாகும். – மாற்றங்கள் என்பன திறந்த, நியாயமான மற்றும் வெளிப்படையான மற்றும் போட்டிப் பொருளாதாரம். நீங்கள் மற்றும் ஏனைய வர்த்தகத் தலைவர்கள் வழங்கும் பின்னூட்டங்களை அடிப்படையாகக் கொண்டு கணிக்கக் கூடிய மற்றும் ஒழுங்குமுறையான சூழலை ஏற்படுத்துவது தொடர்பில் எனது குழுவும் நானும், முக்கியமான சட்ட மறுசீரமைப்புக்கள் மற்றும் நவீனமயப்படுத்தல்கள் தொடர்பில் தொடர்ச்சியாக ஆலோசனைகளை நடத்துவோம். பலமான புலமைச்சொத்து உரிமைப் பாதுகாப்பு, உதாரணமாக, அமெரிக்க வர்த்தகத்துடன் போட்டியிட மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தில் முதலிட விரும்பும் நாடுகள் இவற்றை அதிகரிப்பது முக்கியமானதாகும். இந்த அடிப்படையான உரிமை இன்றி புத்தாக்கத்துக்கான கொடுப்பனவுகள் கிடைக்காது, ஏனெனில் புத்தாக்கத்துக்கான கௌரவம் வழங்கப்படாது. இலங்கையின் தொழில்நுட்பத்துறையானது நவீன புலமைச் சொத்து உரிமையிலேயே தங்கியுள்ளது.

கணிக்கக் கூடிய மற்றும் ஒழுங்குமுறையான கட்டுப்பாடுகள் விடயத்தில், விநியோகஸ்தர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பணியாளர்கள் மத்தியில் பொதுவான புரிந்துணர்வு மற்றும் நடைமுறைப்படுத்தக் கூடிய உரிமைகளை உருவாக்குவது போன்றவற்றுக்கு நாம் தொடர்ச்சியாக உதவுவோம். ஏனைய பங்குதாரர்களுடன் தனியார் துறையினரிடமிருந்து கிடைக்கும் கருத்துக்களையும் உள்ளடக்கியதாக இந்த ஒழுங்குவிதிகள் அமையவேண்டும். எனவே, வர்த்தக சமூகத்தின் குரல்களை அரசாங்கம் செவிமடுக்க வேண்டும் என்ற ஆலோசனையை வழங்குவதுடன், அதனை தொடர்ந்தும் நாம் ஊக்கப்படுத்துகின்றோம்.

சரியான முறையில் வர்த்தக உரிமையைச் செய்வதும் அமெரிக்காவின் ஒரு வர்த்தகநாமம் என்பதை கூறுவதில் நான் பெருமைப்படுகின்றேன். இது அமெரிக்க வர்த்தகங்களுடன் வர்த்தம் செய்வதற்கான மதிப்பை வழங்குவதுடன், இது இலங்கை மக்களால் பாராட்டக்கூடியது என்றும் நம்புகின்றேன். பதில் உதவி இராஜாங்கச் செயலாளர் அலிஸ் வெல்ஸின் விஜயத்தின்போது திங்கட்கிழமை அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தின் உறுப்பினர்கள் பலர் அவரைச் சந்தித்திருந்ததுடன், அமெரிக்க வர்த்தகங்கள் தனியார் பங்காண்மையுடன் எவ்வாறு பொருளாதார மற்றும் சமூக நன்மைகளை அதிகரிப்பது என்பது பற்றி கலந்துரையாடப்பட்டிருந்தது.

இந்த நிலைப்பாடே மீண்டும் மீண்டும் குறிப்பிடப்படுகிறது என நான் கருதுகின்றேன். ஏனெனில், எமது கம்பனிகள் உலகம் முழுவதுமுள்ள வர்த்தக செயற்பாடுகளுக்கு முன்னுதாரணமாக இருக்கின்றன. இது அமெரிக்க வர்த்தகநாமத்தின் ஒரு பகுதியாகும். திறந்த, நியாயமான, பரஸ்பர மற்றும் வெளிப்படையான பொருளாதாரம் மக்களின் வாழ்க்கை மற்றும் தரத்தை உயர்த்தும் என்பதை நாம் அறிந்தமையால் இவற்றை அடிப்படையாகக் கொண்டு எமது பொருளாதார இராஜதந்திரத்தை பயன்படுத்தி உலகம் முழுவதிலும் காணப்படும் பொருளாதார வாய்ப்புக்களை விஸ்தரிக்க நாம் செயற்பட்டு வருகின்றோம்.

பலமான, இறைமையுள்ள மற்றும் திறன்கொண்ட நாடுகள் பங்காண்மையை ஏற்படுத்தும்போது உலகம் பாதுகாப்பானதாக அமைகிறது. எனவேதான் இலங்கையுடன் நீடித்திருக்கக் கூடிய மற்றும் அர்த்தபுஷ்டியுள்ள பங்காண்மையை பேண எதிர்பார்க்கின்றோம். கடந்த 70 வருட இருதரப்பு உறவுகளின் அடிப்படையில் செயற்பட்டு முதலீடுகளை கவரும் மற்றும் அனைவருக்கும் வாய்ப்புகளை வழங்கும் தரங்களை உயர்த்தும் திறந்த, நியாயமான, பரஸ்பர மற்றும் வெளிப்படையான பொருளாதாரத்துடன் கூடிய எதிர்காலமொன்றை எதிர்பார்க்கின்றோம்.

நன்றி!